பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**17 01 2026** **6 45**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தமிழகத்தில் இருந்து புறப்படும் **3** அம்ரித் பாரத் ரயில்களை காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைக்கிறார்.

2. மத்திய அரசின் நிதி ஆதரவால் புத்தொழில் நிறுவனங்கள் துறை வேகமாக விரிவடைந்து வருவதாக மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3. காணும் பொங்கலை முன்னிட்டு இன்று மாநிலம் முழுவதும் சுற்றுலாத் தலங்கள் மற்றும் மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

4. உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டி இன்று நடைபெற உள்ளது.

5. மகளிர் ப்ரீமியர் லீக் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி **32** ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தமிழகத்தில் இருந்து புறப்படும் 3 அம்ரித் பாரத் ரயில்களை காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைக்கிறார்.

மேற்குவங்கம் மாநிலம் ஜல்பைகுறி - திருச்சி, ஜல்பைகுரி - நாகர்கோவில், தாம்பரம் - மேற்குவங்க மாநிலம் சந்திரகாச்சி ஆகிய 3 அம்ரித் பாரத் ரயில் சேவைகள் இன்று தொடங்கப்படுகின்றன.

ஜல்பைகுரி - திருச்சி அம்ரித் பாரத் ரயில் எழும்பூர் — தாம்பரம் — செங்கல்பட்டு — மயிலாடுதுறை — கும்பகோணம் வழியாக இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜல்பைகுரி — நாகர்கோவில் அம்ரித் பாரத் ரயில் காட்பாடி, ஜோலார்பேட்டை, கோவை, திண்டுக்கல், மதுரை வழியாக நாகர்கோவிலுக்கு இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரகாச்சி - தாம்பரம் இடையே இயக்கப்பட உள்ள அம்ரித் பாரத் ரயில், விசாகப்பட்டினம் - விஜயவாடா- நெல்லூர் - எழும்பூர் வழியாக இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

நவீன இந்தியாவின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்யும் வகையில், நாடு முழுவதும் ரயில் பயணிகளுக்கான வசதிகளை மத்திய அரசு அதிகரித்து வருகிறது.

அதன் ஒருபகுதியாக இந்தப் புதிய ரயில் சேவைகள் தொடங்கப்படுகின்றன.

<<<<>>>>

அரசின் முறையான கொள்கைகள் மற்றும் நிதி ஆதரவினால் புத்தொழில்நிறுவனங்கள் துறை வேகமாக விரிவடைந்து வருவதாக மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

டீப் டெக் எனப்படும் வெறும் மென்பொருள் மேம்பாடு மட்டுமல்லாமல், அறிவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் பொறியியல் ரீதியான ஆழமான ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பத் துறையிலும் புத்தொழில் நிறுவனங்கள் மிகவேகமாக வளர்ந்து வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த விவரங்களை அவர் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.

இது வெறும் வணிக ரீதியான மாற்றத்தை மட்டும் ஏற்படுத்தாமல், நாட்டின் பாதுகாப்பு, விண்வெளி மற்றும் மருத்துவத் துறைகளில் பெரும் புரட்சியை ஏற்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இயங்கி வரும் புத்தொழில் நிறுவனங்களில் 80 சதவீதம் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் செமிகண்டக்டர் இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் 'வடிவமைப்பு சார்ந்த ஊக்கத்தொகை' திட்டத்தின் மூலம் இதுவரை 23 புத்தொழில் நிறுவனங்கள் ஆதரவு பெற்றுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

இந்தியாவிடமிருந்து உலக நாடுகள் பலவற்றை எதிர்பார்ப்பதாகவும், வலிமையும், செல்வாக்கும் இருந்தால் மட்டுமே உலகிற்கு நம்மால் ஆக்கப்பூர்வமான பங்களிப்பை வழங்க முடியும் என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் திரு. மோகன் பகவத் தெரிவித்துள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் கங்காபூரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பொருளாதார ரீதியாக சுயசார்பு இந்தியாவின் அவசியத்தை வலியுறுத்தினார்.

நாட்டின் கொள்கை வகுப்பாளர்கள் எந்தவித வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அல்லது வர்த்தக வரி அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாமல் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டு வருவதை பாராட்டினார்.

உலகமயமாக்கலை மற்றவர்கள் வணிக கண்ணோட்டத்தில் பார்க்கும்போது இந்தியர்கள் அதனை உலகமே ஒரு குடும்பம் என்ற ரீதியில் அணுகுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சாதி மற்றம் மத பிரிவினைகளைக் கடந்து மக்கள் அனைவரும் நாட்டின் வளர்ச்சிக்காக ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்றும் திரு. மோகன் பகவத் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

காணும் பொங்கலை முன்னிட்டு இன்று மாநிலம் முழுவதும் சுற்றுலாத் தலங்கள் மற்றும் மக்கள் அதிகமாக கூடும் கடற்கரை மற்றும் பூங்காக்களில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்னையைப் பொறுத்தவரை மெரினா கடற்கரைக்கு ஆயிரக்கணக்கான மக்கள் வருகை தருவார்கள் என்பதால், காமராஜர் சாலையில் இன்று போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பாரிமுனையில் இருந்து கலங்கரைவிளக்கம் நோக்கி வரும் வாகனங்கள் போர்நினைவுச் சின்னம் அருகே கொடிமர இல்ல சாலை வழியாக அண்ணாசாலைக்கு திருப்பிவிடப்பட்டுள்ளது.

மாநகர பேருந்துகளுக்கு இதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

உழைப்பாளர் சிலை முதல் கண்ணகி சிலை வரை உள்ள பாதை ஒருவழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளது.

கலங்கரைவிளக்கத்தில் இருந்து கண்ணகி சிலை நோக்கி வரும் வாகனங்கள் காமராஜர் சாலையில் அனுமதிக்கப்படமாட்டாது என்றும், இந்த வாகனங்கள் ராதாகிருஷ்ணன் சாலை, டி.டி.கே. சாலை, ராயப்பேட்டை வழியாக அண்ணா சாலையை அடையலாம் என்று போக்குவரத்துக் காவல்துறை அறிவித்துள்ளது.

அதேபோல் நகரின் பல்வேறு பகுதியில் இருந்து கடற்கரையை நோக்கி வரும் வாகனங்களும் ஆங்காங்கே திருப்பிவிடப்பட்டுள்ளன.

காணும் பொங்கலை முன்னிட்டு உயிரியல் பூங்காக்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களில் 108 ஆம்புலன்ஸ் வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

சுகாதாரத்துறையின் சார்பில் மருத்துவ முகாம்களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<>>>

உலகப் புகழ் பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுப் போட்டி இன்று நடைபெற உள்ளது.

இதில் பங்கேற்க மாநிலம் முழுவதிலும் இருந்து மாடுபிடி வீரர்கள் மிகுந்த ஆர்வத்துடன் உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Raguraja - 62 Sec)**

<<<>>>

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் நவீன ஜல்லிக்கட்டு என்ற பெயரில் கோழி பிடிக்கும் போட்டி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக நேற்று நடைபெற்றது.

பொங்கல் திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற இப்போட்டியில் பெண்களும், குழந்தைகளும் உற்சாகமாக கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Kannan - 38 Sec)**

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

வெனிசுலாவில் இருந்து **5** புள்ளி **2** பில்லியன் டாலர் மதிப்புள்ள கச்சா எண்ணெய் அமெரிக்காவுக்கு கிடைக்கும் என்று அந்நாட்டின் அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

--------------

சவூதி அரேபியாவின் ரியாதில் உள்ள இந்திய தூதரகத்தில் முன்னாள் ராணுவ வீரர்கள் தினம் நேற்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

--------------

உடல் பாதிப்புகளுக்கு சுயமாக மருந்துகளை உட்கொள்ள செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டாம் என்று எய்ம்ஸ் மருத்துவமனை கேட்டுக்கொண்டுள்ளது.

--------------

மகளிர் தலைமையிலான உள்ளாட்சி அமைப்புகளில் வெளிப்படைத்தன்மை நிலவுவதாக மாநிலங்களவைத் துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஷ் தெரிவித்துள்ளார்.

--------------

மீன்வளத்துறையில் எதிர்கால செயல்திட்டத்தை வகுக்க மத்திய - மாநில அரசுகளின் மீன்வளத்துறை செயலர்களின் தேசிய மாநாடு புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

--------------

காணும் பொங்கலை முன்னிட்டு வேளச்சேரி - சென்னை கடற்கரை இடையே 6 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

--------------

பாலமேடு ஜல்லிக்கட்டுப் போட்டியில் 16 காளைகளை அடக்கிய மாடுபிடி வீரர் அஜித்துக்கு கார் பரிசாக வழங்கப்பட்டது.

--------------

சென்னை ஏழுகிணறு பகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை அமைச்சர் திரு. பி.கே. சேகர் பாபு நேற்று மாலை ஆய்வு செய்தார்.

--------------

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் திரு.வி.க. நகர் பகுதியில் கட்டப்பட்டு புதிய சமுதாய கூடத்தின் கட்டுமானப் பணிகளை மேயர் திருமதி ப்ரியா நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

--------------

மகளிர் ப்ரீமியர் லீக் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 32 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

நவி மும்பையில் நேற்றிரவு நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய பெங்களூரு அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 182 ரன் எடுத்தது.

183 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய குஜராத் அணி 18 புள்ளி 5 ஓவரில் 150 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் மும்பை அணி - உத்தரப்பிரதேச அணியையும், தில்லி அணி - பெங்களூரு அணியையும் எதிர்கொள்கின்றன.

=----------------

**19** வயதுக்குபட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி ஜிம்பாப்வேயின் **Bulawayo**-வில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**